கடலூர் மாவட்டத்தை பிரித்து விருத்தாசலத்தை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குக!

# நெய்வேலி தொகுதியில் மினி டைடல் பார்க் அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் நெய்வேலி சபா. இராஜேந்திரன் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன. 17-**

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா. இராஜேந்திரன் பேசுகையில் நெய்வேலி தொகுதியில் மினி டைடல் பார்க் அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.**



ஆளுநர் உரை மீதான விவாதத்தில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா. இராஜேந்திரன் பேசியதாவது:-

நவீன தமிழகத்தின் சிற்பிகள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர்களை வணங்குகிறேன். இந்த மாபெரும் சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கிற Governor உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் கலந்து கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பினை அளித்திருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். துணை முதல்வர் அவர்களுக்கும், அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் தங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பதிவு செய்யப்பட்டிருக்கின்ற Governor உரையில், தமிழக முதல்வரின் பல்வேறு சாதனைகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. முதல்வர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்று இருக்கின்ற இந்த அரசு, கடந்த 43 மாதங்களில் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கிற பல்வேறு வாக்குறுதிகளையும் தாண்டி பல திட்டங்களையும், மக்கள் தேவைகளையும் நிறைவேற்றியிருக்கிறது. தமிழ்நாடு அரசு ஒரு மக்கள் நலன் சார்ந்த அரசு. "People's welfare Government" என்று அனைத்து தரப்பினராலும் பாராட்டப்படுகின்றது.

தமிழ்நாட்டை ஒருங்கிணைந்த வளர்ச்சிப்பெற்ற மாநிலமாக மாற்றியிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாது, தனிநபர் வருமானத்திலும் அனைத்து தரப்பினரும் வளர்ச்சியடைய உறுதி செய்திருக்கிறது. மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சியை மட்டுமே பெற்றிருக்கிறது. கேரளா போன்ற மாநிலம் சமுதாய கட்டமைப்பில் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மட்டும்தான் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியையும், சமுதாய வளர்ச்சியையும் பெற்றிருக்கிறது. அதனால் தான் நமது உள்நாட்டு உற்பத்தி 10.69 சதவிகிதமாக இருக்கிறது. இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 6.4 சதவிகிதமாகும். தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் 3 இலட்சத்து 50 ஆயிரத்து 695 ரூபாய். கடந்த ஆண்டைவிட இது 14 சதவிகிதம் அதிகம். தமிழ்நாடு தெற்காசியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக உருவாக்குவோம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தீர்க்கதரிசியாக திட்டங்களை உருவாக்குகின்ற முதலமைச்சர் அவர்களால்தான் இதுபோன்ற அறிவிப்புகளைச் செய்ய முடியும். நாட்டின் வளர்ச்சி பெண்களின் முன்னேற்றத்தில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்களுக்காகவும் பல்வேறு திட்டங்களை குறிப்பாக, மகளிர் உரிமைத் தொகை திட்டம், மகளிர் விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தமிழ்நாட்டில் இப்போது 1 கோடியே 15 இலட்சம் பேர் பயன்பெற்று கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன் பேரவையில் பதிலளித்த நமது துணை முதலமைச்சர் அவர்கள் தகுதியுடைய விடுபட்ட வர்களுக்கும் உரிமைத் தொகையை வழங்க இன்னும் 3 மாதகாலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். துணை முதலமைச்சர் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மகளிர் விடியல் பயணத் திட்டத்தை பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டில் 32 இலட்சமாக இருந்த பெண்களின் தினசரி பயண எண்ணிக்கை தற்போது 57 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது கடந்த நான்காண்டுகளில் 55 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு காரணம் முதலமைச்சர் அவர்கள். இதுவரை 571 கோடிக்கும் மேற்பட்ட பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளனர். இந்த ஒவ்வொரு பயணமும் அந்தப் பெண்ணின் குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உதவியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. எனவே, 'முதலமைச்சரின் காலை உணவு' திட்டத்தின்கீழ், தற்போது மாநிலம் முழுவதும் 34 ஆயிரத்து 987 தொடக்கப் பள்ளிகளில், 17.53 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயன்பெற்றிருக்கிறார்கள். இது அந்தப் பள்ளிக் குழந்தைகள் மட்டுமல்லாது, ஏழை தாய்மார்களுக்கும் பயன்படும் திட்டமாகவே பார்க்கப்படுகிறது. புதுமைப் பெண் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் பயின்று உயர் கல்வி படிக்கின்ற 4.25 இலட்சம் மாணவிகள் இதுவரை பயன்பெற்றிருக்கிறார்கள். கடந்த 30.12.2024 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்க நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்கள் பங்குபெற்று, ஆரம்பித்து வைத்தார்கள். அதே நிகழ்ச்சி கடலூரில் நடைபெற்ற போது நாங்களும் கலந்து கொண்டோம். அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் பயனாளியாக பங்குபெற்ற எனது நெய்வேலி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கீழூர் ஊராட்சியில் உள்ள சாதனா என்ற பெண், 'எங்கள் குடும்பத்தில் நாங்கள் 3 பேர் பயனாளிகளாக தமிழக அரசின் திட்டத்தில் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறோம்' என்றும், எனது தாய் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1,000/ பெற்றுக் கொண்டிருக்கிறார் என்றும் சொன்னார். நான் புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் ரூ.1,000/ பெற்றுக் கொண்டிருக்கிறேன். என்னுடைய சகோதரன் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் ரூ.1,000/ பெற்றுக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறபோது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தன்னுடைய குடும்பத்தினுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதுபோன்று தமிழகம் முழுவதும் இருக்கிற இலட்சோபலட்ச குடும்பங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியோடு இருக்கிறார்கள். ஆனால், நேற்றையதினம் எதிர்க்கட்சியில் பேசிய உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். இது போன்று ஆயிராம் ரூபாய் கொடுப்பதனால் கிராமப் பொருளாதாரம் பெருகிவிடுகிறதா, வளர்ந்துவிடுகிறதா என்று கேட்டார்கள். ஆனால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்கு செல்கிறபோது துணை முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய தொகுதிக்கு செல்கிறபோது மகளிர் உரிமைத் தொகையில் விடுபட்டவர்களையெல்லாம் சேர்க்க வேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

எனவே, நீங்கள் இங்கே பேசுவதைஅதேபோல், திட்டக் குழுவில் உறுப்பினராக இருக்கக்கூடிய டாக்டர் எழிலன் அவர்கள் சொல்கிறபோது, இந்த நிதியிலிருந்து 66 சதவிகிதம் தாய்மார்களால் சேமிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கு பேசுவதையாவது கேட்க வேண்டும் அல்லது மக்களையாவது சந்திக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ், நடப்புக் கல்வியாண்டில் மட்டும் 3.52 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

நான் முதல்வன் திட்டம்

நான் முதல்வன் திட்டத்தின்மூலம் 2,085 கல்வி நிறுவனங்கள்மூலம் 14,68,000 மாணவர்கள் இதுவரை பயன்பெற்றிருக்கிறார்கள். விளையாட்டுத் துறையிலே பல்வேறு சாதனைகளை நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலேதான், கடந்த 712025 அன்று சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்களுக்கு, வீராங்கணைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையை அளித்து, அவர்களை எல்லாம் ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல, சர்வதேச Grandmaster Chess Championship போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாடு Grandmaster குகேஷ்க்கு பரிசுத் தொகையாக ரூபாய் 5 கோடியை அறிவித்து, உடனடியாக பாராட்டு விழாவையும் நடத்தி மகிழ்ந்தார்கள் நமது முதல்வர் அவர்கள். விளையாட்டில் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் திராவிட மாடல் அரசின் நோக்கம். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளுக்கும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்படுகின்றது.

### விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பு

விளையாட்டு வீரர்களை முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் ஊக்குவித்து வருகிறார்கள். விளையாட்டு வீரர், வீராங்கணைகளுக்கு 3 சதவிகிதம் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு கொடுத்ததன் மூலம் இதுவரை 84 பேருக்கு அரசு வேலைகள் கிடைத்திருக்கிறது என்ற பெருமையோடு செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெஞ்சல் புயல் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி போன்ற மாவட்டங்களில் பெருமளவு பாதித்தது. இரண்டே நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, பெஞ்சல் புயல் பாதிப்பினைப் பார்வையிட்டு ஆய்வு செய்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு கடலூர் மாவட்ட மக்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 4.1.2025 அன்று பெஞ்சல் புயல் பாதிப்புகளை அதிதீவிர இயற்கை பேரிடராக அறிவித்து, அரசாணையை அரசிதழிலில் வெளியிட்ட தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அரசாணையின்படி பேரிடர் நிதியை மட்டுமின்றி, பிற நிதிகளையும் பயன்படுத்தி பெஞ்சல் புயல் பாதிப்புகளைச் சீரமைக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பெஞ்சல் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு சிறப்பு நிதியை ஒதுக்கி, இந்தச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருவாமூர், எலந்தம்பட்டு, சிறுவத்தூர், செம்மேடு, கருக்கை, ஏரிப்பாளையம், காமாட்சிப்பேட்டை போன்ற கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் அங்கே நீர் உள்ளே புகாமல் இருப்பதற்கு, வெள்ளத் தடுப்பு சுவர்களும், சேதமடைந்திருக்கிற சாலைகளையும் செப்பனிட்டுத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மக்களுடன் முதல்வர் என்ற அற்புதமான திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்து, 30 நாட்களில் மக்களுடைய கோரிக்கைகளுக்கான பரிகாரத்தை காண வேண்டுமென்று அறிவித்திருப்பது ஒரு நல்ல நடைமுறை. அதனால் பல பொது மக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். எங்களை விமர்சனம் செய்கின்றவர்கள்கூட எங்களை அழைத்து இது ஓர் அற்புதமானத் திட்டம். இந்தத் திட்டத்திலே நாங்கள் கோரிக்கை மனுவை கொடுத்த காலத்திலிருந்து Tahsildarயிடமிருந்து phone வருகிறது; RIயிடமிருந்து phone வருகிறது; BDOயிடமிருந்து phone வருகிறது என்று சொல்லி அவர்களுடைய குறைகளைத்தீர்த்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், அதற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். . .

முதலமைச்சர் அவர்கள் உலக அளவில் ஒரு பரிசினை ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது தான் முதல்முறை; சிந்து வெளி நாகரீகத்தின் தொன்மையையும், பெருமையையும் சிறப்பாக வெளிக் கொண்டுவரும் அறிஞருக்கு ரூபாய் 8 கோடி அளவிற்கு பரிசுத் தொகையை அறிவித்திருக்கிற முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், சிந்து வெளி நாகரீகத்தை தொன்மையை வெளிக்கொண்டுவருவதிலே அவருக்கு இருக்கிற ஆர்வத்தை அது காட்டுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனது தொகுதிக் கோரிக்கைகளாக ஒன்று, இரண்டு கூறிக்கொள்கிறேன்.

### என். எல்.சி. தொழிலாளர்கள்

NLC நிறுவனத்தில் Indcoserve Societyயில் பணிபுரிந்து நிரந்தரமாக்கப்படும் தொழிலாளர்களின் ஊதிய நிலைகளை WOA என்பதை W0 என்ற ஊதிய நிலையில் பணியமர்த்த தொடர்ந்து பலகாலமாக போராடிவரும், தொழிலாளர்களின் கோரிக்கையின் அவசியம் கருதி உடனே நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட அமைச்சர் அவர்களும், தொ.மு.ச. பேரவைச் செயலாளர் அவர்களும் ஏற்கெனவே செய்து வருகிறார்கள். எனவே மாவட்ட ஆட்சியர்மூலம் மேற்கொள்ள வேண்டுமென இந்தத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

கடலூர் மாவட்டத்தைப் பிரித்து விருத்தாசலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டமாக அறிவித்திட வேண்டுமாய் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலிக்கு தனி வட்டாட்சியர் அலுவலகம், நெய்வேலிக்கு தனி ஒன்றியம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலி தொகுதியில் ஒரு மினி டைடல் பார்க் அமைக்க வேண்டும்

நெய்வேலி தொகுதிக்கு தனி நீதிமன்றம் கொடுத்திருக்கிறீர்கள், காடாம்புலியூர் பகுதியில் சிட்கோ வளாகம், அதேபோல, அடுக்குமாடி குடியிருப்புகள், நகர்ப்புர மேம்பாட்டுத் துறையின் சார்பில் சுமார் 850 வீடுகள், அதேபோல, நெய்வேலி நகரில் ஒரு I.T.I., சபா. இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். ஒரே ஒரு செய்தியை மட்டும் கடைசியாக சொல்லி, உரையை முடித்து விடுகிறேன்.

இவ்வளவு திட்டங்களையும் கொடுத்து, முதல்வர் அவர்கள் பல்வேறு தரப்பினரின் ஆதரவினையும், அன்பையும் பெற்றிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், நீங்கள் யூகங்களின் அடிப்படையில் கற்பனை கதாபாத்திரத்தை காற்றில் தேடிக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சி நண்பர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். தலைவர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்; உங்களிடம் தரவுகள் இருந்தால் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் எடுத்துச் சொல்லலாம் என்பதை நினைவுப்படுத்துகிறேன்.

எனவே, எதிர்க்கட்சிகளின் அரசியலை மக்கள் ரசிக்கவில்லை. உங்களை மக்கள் புறக்கணிப்பார்கள் என்று சொல்லி, முதல்வர் அவர்களின் விருப்பப்படி, 'வெல்வோம் 200, படைப்போம் வரலாறு' நன்றி, வணக்கம்.

### தொகுதி கோரிக்கைகள்:

வடக்குத்து ஊராட்சிக்கு சிறப்பு நிதி பெற்று தர வேண்டும். இந்திராநகர் வடக்குத்து, ஆரம்ப சுகாதார நிலையம் அனுமதியுடன் மருத்துவர்கள் நியமனம் செய்ய வேண்டும். நெய்வேலி தொகுதியில், பல வருடங்களாக நிலுவையில் உள்ள UDR சர்வே உடனடியாக அமல்படுத்த வேண்டும். வெங்கடாம்பேட்டை, ஆரம்ப சுகாதார நிலை யத்திற்கு புதிய கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும். திருவாமூர்-காமாட்சிபேட்டை, தடுப்பணைகள் கட்டித்தர வேண்டும். விசூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும்.

பத்திரக்கோட்டை மேல்நிலைப் பள்ளிக்கு தேர்வு மையம் அனுமதி தர வேண்டும். எஸ்.ஏரிப்பாளையம், மேட்டுக்குப்பம், பாவைக்குளம் கொஞ்சிகுப்பம், முத்தாண்டிகுப்பம் தனி ஊராட்சிகளாக மாற்ற வேண்டும்.

பள்ளிக் கட்டடங்கள், போர்வெல், OHT சாலைகள் அங்கன்வாடி மையங்கள் போன்றவை ஏற்படுத்தி தர வேண்டும்.

இவ்வாறு சபா. இராஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

---

பல ஆண்டு காலமாக சொல்லப்பட்டு வரும்

# நந்தன் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் மு.பெ.கிரி கேள்வி

சென்னை, ஜன.17-

சட்டப்பேரவையில் செங்கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் துரைமுருகன் அளித்த பதிலும் வருமாறு:-



**மு.பெ.கிரி:** செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு செய்யாறு தொடங்குகிறது, தென்பெண்ணை யாறும் ஓடுகிறது. சாத்தனூர் அணையில் தற்போது பெய்த மழையில் பெரு வெள்ளம் வந்தால் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நான் பிறந்த காலத்திற்கு முன்பிருந்தே, நந்தன் கால்வாய்த் திட்டம் தொடங்கப்படுமென்று சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக, சமீபத்திலே 23 ஏரிகளுக்கு தண்ணீர் தருவதற்காக ஒரு திட்ட அறிக்கை ஒன்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு செயல்படுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** பொதுவாக, நான் எதிர்க்கட்சியில் இருக்கிறபோதும், இந்த மாதிரி கேள்விகளை கேட்கிறபோது, அந்த ஊர் பெயர்களை எல்லாம் கடகடவென சொல்வோம். ஏன் என்றால், அப்போதுதான் தொகுதி மக்களிடம் சொல்லும்போது, உங்க ஊர் பற்றி பேசியிருக்கிறேன், கேட்டிருக்கிறேன் என்று சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதனால், என்னைப் பொறுத்தவரையில், அப்படி கேட்கின்றவர்களுக்கு இல்லை என்று சொல்லி, அமைச்சர் இல்லையென்று சொல்லிவிட்டார் என்று சொல்வதைவிட, கவனிக்கிறேன், முன்னுரிமை தருகிறேன் என்று சொன்னால், நான் கேட்டேன்; முன்னுரிமை அடிப்படையில் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று தொகுதி மக்களிடம் சொல்ல முடியும். ஆகையினால், கூடுமான வரையில், positive ஆகவே தான் நான் பதில் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஏன் என்றால், உங்களுடைய நிலைமை, பல ஆண்டுகாலம் நான் அங்கிருந்தவன் என்கிற முறையில் எனக்கு தெரியும். உறுப்பினர் கிரி அவர்கள் தெரிவித்த நந்தன் கால்வாய், அன்னியூர் வழியாக பனமரத்து ஏரி வழியாக அப்படியே சென்றடைந்துவிடும். உறுப்பினர் செங்கம் தொகுதி தானே?

**மு.பெ.கிரி:** நந்தன் கால்வாய் திருவண்ணாமலை மாவட்டம், சமுத்திரம் ஏரியில் join ஆகிறது.

**அமைச்சர் துரைமுருகன்:** நந்தன் கால்வாய் திட்டம் என்பது நீண்டநெடுங்காலமாக இருக்கின்ற ஒரு கோரிக்கை. நான் 1989ல் பொதுப்பணித்துறை அமைச்சர் பதவியை ஏற்றபோது, கலைஞர் என்னிடத்திலே சொன்னார்; உறுப்பினர் ஏ. கோவிந்தசாமி 1952லே இருந்து நந்தன் கால்வாய்த் திட்டத்தை கேட்டுக்கொண்டே இருப்பார். அதை எப்படியாவது கொஞ்சம் நிறைவேற்றிவிடு என்று தெரிவித்தார்கள். அதற்கு ஒவ்வொரு முறையும் தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே வரும். ஆனால், எப்படியாவது இந்த முறை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறோம். முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மா. சுப்பிரமணியம்

### சனவரி 15 (2013)



**ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்**

**ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“ 'மா.சு' என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. சுப்பையா

### சனவரி 16 (1980)



**சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.**

**சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**“எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா” என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**